This question paper contains 2 printed pages]

Your Roll No. ........................

5149

**B.Com. (H)/II** **E**

Paper XV—TAMIL LANGUAGE

(Application of Language Skills and Prose Text)

*Time : 2 Hours* *Maximum Marks : 50*

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

**Note :** The maximum marks printed on the question paper are applicable for the candidates registered with the School of Open Learning for the B.Com. (Hons.). These marks will, however, be scaled down proportionately in respect of the students of regular colleges, at the time of posting of awards for compilation of result.

1. ஒரு நிறுவனம் தயாரிக்கும் பொருட்களின் மாதிரிகள் கேட்டு கடிதம் ஒன்று எழுதுக. 10

(அல்லது)

வணிகக் கடிதத்தின் அமைப்பினை விளக்கி வரைக.

2. பின்வரும் பத்தியைப் படித்து, அதனடிப்படையில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்குச் சுருக்கமான விடை தருக. 10

ஜீவா ஒரு சமூக சீர்திருத்தவாதியாகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். பள்ளிப் படிப்புக் காலத்தில் அவரைக் கவர்ந்த பிரதான காந்தியக் கருத்து தீண்டாமை ஒழிப்பே. வைக்கம் போராட்டம், சுசீந்திரம் போராட்டம், சேரன்மாதேவிப் போராட்டம் ஆகியன அவரிடம் தோன்றியிருந்த சமூகச் சீர்திருத்த உணர்வை வளர்த்தன. ஆனால், தன்னுடைய சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதில் அவர் எண்ணிலடங்காத் தொல்லை அடைந்தார். அவருடைய சமூகச் சீர்திருத்த லட்சியங்களையே தங்கள் லட்சியங்களாகக் கொண்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய காந்தியவாதிகள், ஜீவா அந்த லட்சியங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கிய போது அவரைப் பகைத்தார்கள். எல்லா சாதியினரும் ஆண்டவன் முன் சமம் என்ற ராமானுஜர் காலத்துச் சமரசக் கொள்கையின் பாதுகாவலர்களாக அமைந்த ஆசிரமப் புரவலர்கள் ஜீவாவை எதிர்த்தார்கள். கோட்டையூரில், ஆண்டவன்முன் சகல சாதியினரும் சமம் என்ற சீர்திருத்தக் கருத்தை நடைமுறைப் படுத்தியதற்காக ஜீவா குத்தப்பட்டார்.

கேள்விகள்:

(அ) எவை ஜீவாவின் சமூகச் சீர்திருத்த உணர்வை வளர்த்தன?

(ஆ) யார், எதற்காக ஜீவாவைப் பகைத்தார்கள்?

(இ) ஆசிரமப் புரவலர்கள் செய்தது என்ன?

(ஈ) ஜீவா எதற்காகக் குத்தப்பட்டார்?

(உ) ராமானுஜர் காலத்துக் கொள்கை எது?

3. கலைச் சொல்லாக்கத்தின் பயன்களை விளக்குக. 10

(அல்லது)

கீழ்க்கண்ட கலைச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக:

அ) Bill of Exchange

ஆ) Crossed Cheque

இ) Revenue

ஈ) Current Account

உ) Promissory Note

4. எவையேனும் இரு தலைப்புகளில் கட்டுரை எழுதுக : 2×10=20

(அ) தமிழ் நாட்டு வாணிகர்

(ஆ) தமிழகத்தின் துறைமுகப் பட்டினங்கள்

(இ) தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்கள்

(ஈ) பண்டைத் தமிழகத்தின் போக்குவரத்துச் சாதனங்கள்